# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 38/ந/2019

நாள் : 13/06/2019

திரு C. முத்து,
மேலூர் – 625 106. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேலூர் நகராட்சி,
மேலூர். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி, கருத்தப்புலியன்பட்டி முகவரியில் வசிக்கும் திரு C. முத்து அவர்களின் 20.03.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 38/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி, கருத்தப்புலியன்பட்டியில் வசிக்கும் திரு C. முத்து என்பவர் கருத்தப்புலியன்பட்டி நகராட்சி துவக்கப்பள்ளியில் கூடுதலாக முதல் தளம் அமைப்பது சம்பந்தமாக நடைபெற்ற கீழ்க்காணும் முறைகேடுகளைத் தெரிவித்து நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார் :-

(1) கட்டடப் பணி நிறைவு பெறாமலேயே ஒப்பந்ததாரருக்கு முழுத் தொகையையும் காசோலையாக வழங்கியது ;

(2) பணி நிறைவு பெறாமல் இருப்பதால் கீழ்தளத்தில் பயிலும் குழந்தைகளின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருப்பது ; மற்றும்

(3) நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் தங்களது பணிகளை முறையாக செய்யத் தவறியதுடன் நகராட்சிப் பணத்தை கையாடல் செய்தது.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. கருத்தப்புலியன்பட்டியில் ஆரம்பப்பள்ளியில் மேல்தளம் அமைக்கும் பணிக்கு கடந்த 1 ½ ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சுற்றுச் சுவர் மற்றும் மேல்தளப் பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுவிட்டது என்று ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும், இப்பணிக்கான ஒப்பந்தம் குறித்து புகார் தெரிவித்ததின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரின் விசாரணையில் உள்ளது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், தற்பொழுது மேல்தளத்தில் டைல்ஸ் ஒட்டுதல்,

கதவு, சன்னல் அமைத்தல் மற்றும் மின் சாதனப் பணிகளுக்கு புதியதாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறதென்றும், குழந்தைகளின் பாதுகாப்பு கருதி கோடைவிடுமுறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி பொறுப்பு ஆணையாளரிடம் 03.06.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தற்பொழுது கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன என்றும், முதல் ஒப்பந்தப் புள்ளி சம்பந்தமாக, ஒப்பந்ததாரின் முன்வைப்புத் தொகையும், அவருக்கு வழங்கப்படவேண்டிய பட்டியல் தொகையில் ரூ.50,000/– பிடித்தம் செய்து வழங்கப்படாமல் உள்ளன என்று விசாரணையின்போது தெரிவித்தார். இரண்டாவது ஒப்பந்தப்பணி சம்பந்தமாக அளவுகள் மற்றும் மேல் அளவுகள் செய்து பணம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

4. மேலூர் நகராட்சிக்குட்பட்ட கருத்தப்புலியன்பட்டியில் ஆரம்பப்பள்ளி கட்டடப் பணிகள் இரண்டு கட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதல் கட்ட ஒப்பந்தப் பணி சம்பந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரின் விசாரணையில் உள்ளதாகத் தெரிகிறது. முதல் கட்டடப் பணி ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகையும், ரூ.50 ஆயிரம் மதிப்பிலான பட்டியல் தொகையும் விடுவிக்கப்படாமல் உள்ளதாக அறியமுடிகிறது. இரண்டாவது கட்டப் பணிகள் முழுமை பெற்று விட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரின் விசாரணையிலும் உள்ளது. முறையீட்டு மனுதாரர் இரண்டு முறை விசாரணைக்கு அழைத்தும் அளித்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளாமல் விசாரணைக்கு மனுதாரர் வராதது சரியல்ல. எனவே, இந்நேர்வில் முறையீட்டு மனுதாரருக்கு கூறிக்கொள்ள ஏதும் இல்லை என்று கருதி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தினை ஏற்று இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு C. முத்து,
**கருத்தப்புலியன்பட்டி,**
**மேலூர் – 625 106**
**மதுரை மாவட்டம்**

2. **நகராட்சி ஆணையர்,**
**மேலூர் நகராட்சி,**
**மேலூர்.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**